# ‘மெட்ரோ’வில் முக கவசம் அணியாவிட்டால் அபராதம்

**சென்னை, ஏப். 11–**

முக கவசம் அணியாத பயணியரிடம், 200 ரூபாய் அபராதம் வசூலிக்கப்படும் என, சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகத்தின் சார்பில் கூறப்பட்டுள்ளதாவது:

கொரோனா தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, பொது இடங்களில், முக கவசம் அணிவது கட்டாயம் என, அரசு அறிவித்துள் ளது. அதன்படி, மெட்ரோ நிலையங்களிலும், ரயில்களிலும் பயணியர் கட்டாயம் முக கவசம் அணிய வேண்டும்.

ரயில் நிலையங்களுக்குள் நுழையும் போது மட்டுமின்றி, ரயிலில் பயணிக்கும் போதும், முக கவசத்தை சரியான முறையில் அணிய வேண்டும். முக கவசம் அணியாதோர், பாதி அளவுக்கு அணிபவர்கள் மீது, நடவடிக்கை எடுக் கப்படும். அவர்களிடம், 200 ரூபாய் அபராதம் வசூலிக்கப்படும். இந்த நடைமுறை, இன்று முதல் அமலாகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.